புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 ISSN: 2456-821X

# தூது வெளிப்படுத்தும் பண்பாட்டு மரபுகள்

முனைவர் ம.சரளாதேவி,
தலைவர் மற்றும் உதவிப்பேராசிரியர் (பிரிவு-2),
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),
திருப்பத்தூர்- 635 601.

*ஒருவர் ஒரு கருத்தை ஒருவரிடம் நேரடியாக வெளிப்படுத்தலாம் அல்லது பிறர் வாயிலாக வெளிப்படுத்தலாம். இக்காலத்தில் கருத்தை வெளிப்படுத்தப் பல்வேறு வகையில் மின்தொடர்பு சாதனங்கள் அதிகரித்துள்ளன. ஆனால் அக்காலத்தில் ஒரு செய்தியைப் பிறர் வாயிலாக வெளிப்படுத்த உயர்திணை, அஃறிணைப் பொருள்களைப் பயன்படுத்தியுள்ளனர். அதற்குத் தூது என்று பெயரிட்டுள்ளனர். தனி மனிதர் முதல் அரசர் வரை தூது மிக அவசியத் தேவையாக இருந்துள்ளது. அத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த தூது குறித்தும் தூது இலக்கியங்களின் வாயிலாகப் பண்பாட்டு மரபுகளை ஆராயும் வகையிலும் இக்கட்டுரை அமைகின்றது.*

## தூது - விளக்கம்

தூது என்பது ஒருவர் தம் கருத்தை வேறொருவருக்குப் புலப்படுத்த இடையே பிறிதொருவரை அனுப்புவதாகும். அரசர்கள் பகைவர்களிடத்தும், புலவர்கள் வள்ளல்களிடத்தும், தலைவர் தலைவியரிடத்தும் தூது அனுப்பியுள்ளனர். இதற்கான சான்றுகளைத் தொல்காப்பியம், சங்க இலக்கியத்தின் மூலம் அறிய முடிகின்றது.

இலக்கியங்கள் பின்வரும் நிலைகளில் தூது குறித்த செய்திகளை வெளிப்படுத்தியுள்ளன. 1.காதல் துயரம் காரணமாக ஓர் ஆண் அல்லது பெண், தான் காதல் கொண்ட பெண் அல்லது ஆணுக்குத் தூது அனுப்புவது. 2. உயர்திணையைப்போன்று அஃறிணைப் பொருளைத் தூது அனுப்புவது. 3. தூது பெறுவோரிடம் சென்று மாலையோ மற்ற பொருள்களோ பெற்று வரும் நிலையில் தூது அமைகின்றது.

ஆனால் தூது நூல்களில் காதல் காரணமாக மட்டுமன்றி, வேறு பல காரணங்களுக்காகவும் தூது நிகழ்வதை அறிய முடிகின்றது.

தமிழில் தோன்றிய முதல் தூது நூல் நெஞ்சுவிடு தூது என்ற நூலைத் தொடர்ந்து தமிழ் விடு தூது, நெல்விடு தூது, துகில்விடு தூது, அன்னம் விடு தூது, மேகம் விடு தூது, காக்கைவிடு தூது, பணவிடு தூது, மான்விடு தூது, வண்டுவிடு தூது, கிள்ளைவிடு தூது போன்று நூற்று ஐம்பதற்கும் மேற்பட்ட தூது நூல்கள் தோன்றியுள்ளன.

“தூது விடுவதற்குரிய பொருள் இவைதாமென்று வரையறையில்லை. இரத்தினச்சுருக்கத்துச் செய்யுள் ஒன்று, அன்னம், மயில், கிள்ளை, மேகம், நாகணவாய்ப்புள், பாங்கி, குயில், நெஞ்சு, தென்றல், வண்டு என்னும் பத்துப் பொருள்களைக் கூறுகின்றது.” (உ.வே.சா. அவர்கள் பதிப்பித்த தூது நூல்கள் -7, 2009, ப.2)

இதிலிருந்து தூது விடுவதற்கு அதிகம் அஃறிணைப் பொருள்களைப் பயன்படுத்தியுள்ளனர் என்பது புலப்படுகின்றது.

## தொல்காப்பியம், நன்னூலில் தூது

தொல்காப்பியர், தலைவன் - தலைவி பிரிவுகளில் ஒன்றாகத் தூது செல்வதைக் குறிப்பிட்டுள்ளார்.

”ஓதல் பகையே தூது இவை பிரிவே”(தொல்.பொருள்.971)

தலைவன் தூது காரணமாகத் தலைவியைப் பிரிந்து செல்வதும் உண்டு. தலைவியிடம் உயர்திணை, அஃறிணைப் பொருட்களைத் தூது அனுப்புவதும் உண்டு என்ற இரண்டு மரபு நிலைகளைத் தொல்காப்பியர் எடுத்துரைத்துள்ளார்.

தலைவனைப் பிரிந்த மயக்கத்தால் தலைவி உயர்திணைப் பொருளையும் அஃறிணைப் பொருளையும் தூது விடுப்பதாகக் கூறுவது மரபு.

"சொல்லா மரபின் அவற்றொடு கெழீஇச்
செய்யா மரபின் தொழிற்படுத்து அடக்கியும்"(தொல்.பொருள்.1142)

சொல்ல இயலா நிலையினவற்றொடு பொருந்தி செய்ய இயலாதவற்றைச் செய்வது போலக் காட்டியும் என்று தொல்காப்பியம் கூறுகின்றது. இதேக் கருத்தினை நன்னூல் குறிப்பிடும் பொழுது,

"கேட்குந போலவும் கிளக்குந போலவும்
இயக்குந போலவும் இயற்றுந போலவும்
அஃறிணை மருங்கினும் அறையப் படுமே"(நன்.சொல்.409)

கேளாத பொருள்களைக் கேட்பன போலவும் பேசாதவற்றைப் பேசுவன போலவும் நடக்காதவற்றை நடப்பன போலவும் இவையல்லாத பிற தொழில்கள் செய்யாதவற்றைச் செய்வன போலச் சொல்லுதலும் அஃறிணையிடத்து உயர்திணைப் போல வைத்துச் சொல்லப்படும் என்கிறது நன்னூல்.

ஒருவர் கூறும் கருத்தை அறிந்து மற்றொருவர்க்கு உணர்த்தும் ஆற்றல் வாய்ந்த மக்களைத் தூதாக அனுப்பும் வழக்கம் இருந்துள்ளபோதிலும் அத்தகைய ஆற்றலில்லாத அஃறிணைப் பொருட்களையும் தூது விடுக்கும் முறை இலக்கண, இலக்கியங்களில் காணப்படுகின்றன. இதிலிருந்து உயர்திணையை விட அஃறிணைப் பொருள்களையே அதிகமாகத் தூது விடுக்கும் மரபு இருந்துள்ளதை அறியமுடிகின்றது.

"தூது முனிவு இன்மை" (தொல்.மெய்.1217)

தூது உரைத்தலை விரும்புதல் என்றும் தொல்காப்பியம் தூது குறித்து எடுத்துரைத்துள்ளது.

"தோழி தாயே பார்ப்பான் பாங்கன்
பாணன் பாடினி இளையர் விருந்தினர்
கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்
யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப" (தொல். 1139)

பன்னிரண்டு பேரை மட்டும் தூது செல்வதற்கு உரியவர்களாகத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

தொல்காப்பியர் கருத்துகளில் இருந்து அக்கால மக்கள் தூது அனுப்புவதை விரும்பியுள்ளனர் என்பதையும் சொல்ல இயலாத அஃறிணைப் பொருளையும் உயர்திணையாகிய பன்னிரண்டு பேரையும் தூது அனுப்பியுள்ளனர் என்பதையும் அறியமுடிகின்றது. இக்கருத்துகளிலிருந்து தூது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாகத் தொல்காப்பியம், நன்னூல் காலத்தில் இருந்துள்ளது என்பதும் எந்தச் செய்தியை யாரிடம் கூறித் தூது அனுப்ப வேண்டும் என்ற பண்பாட்டு நிலையையும் வெளிப்படுத்தியுள்ளன.

சங்க இலக்கியங்களில் தூது

சங்க இலக்கியங்களில் அகப்பொருள், புறப்பொருள் இரண்டிலும் தூதுச் செய்திகள் அமைந்துள்ளன.

அகநானூற்றில் கானலுங் கழறாது(170) செய்யுளில் தலைவி நண்டைத் தூதுவிட்ட செய்தியும், ஐங்குறுநூற்றில் சூழ்கம் வம்மோ (317) செய்யுளில் நெஞ்சைத் தூதுவிட்ட செய்தியும், நற்றிணையில் சிறுவெள்ளாங் குருகே (70) என்பது வெள்ளாங் குருகைத் தூது விடுவதையும் வெளிப்படுத்துகின்றன.

சங்க இலக்கிய நூல்களில் ஒன்றாகிய புறநானூற்றில் தூது குறித்த செய்தி இடம்பெற்றுள்ளது.

"அன்னச் சேவல்! அன்னச் சேவல்!
ஆடுகொள் வென்றி அடுபோர் அண்ணல்
நாடுதலை அளிக்கும் ஒள்முகம் போல,

கோடுகூடு மதியம் முகிழ்நிலா விளங்கும்
மையல் மாலை, யாம் கையறுபு இனைய,
குமரிஅம் பெருந்துறை அயிரை மாந்தி,
வடமலைப் பெயர்குவை ஆயின், இடையது
சோழநல் நாட்டுப் படினே, கோழி
உயர்நிலை மாடத்து, குறும்பொறை அசைஇ,
வாயில்விடாது கோயில் புக்கு எம்
பெருங்கோக் கிள்ளி கேட்க, இரும்பிசிர்
ஆந்தை அடியுறை எனினே, மாண்டநின்
இன்புறு பேடை அணிய, தன்
நன்புறு நன்கலம் நல்குவன் நினக்கே.''(புறம்.67)

பிசிராந்தையார் ஆண் அன்னத்தைத் தூது செல்ல அனுப்பும் நிலையில் கோப்பெருஞ்சோழனின் புகழைக் கூறுவதுடன், உன் பெடை அணியத் தக்க நல்ல அணிகலன்களைத் தருவான் என்று கூறுவதன் வாயிலாகத் தூது சென்றால் அதற்குரிய பலன் கிடைக்கும் என்ற தூதின் மரபும் வெளிப்படுகின்றது.

அதியமான் என்ற மன்னனுக்காக ஔவையார் என்ற புலவர் தொண்டைமான் என்ற அரசனிடம் போர் மேற்கொள்ள வேண்டாம் என்று வலியுறுத்துவதற்காகத் தூது சென்றதாகப் புறநானூற்றுப் பாடல் கூறுகிறது.

''இவ்வே பீலி அணிந்து, மாலை சூட்டிக்
கண்திரள் நோன்காழ் திருத்தி, நெய் அணிந்து
கடியுடை வியல்நக ரவ்வே அவ்வே
பகைவர்க் குத்தி, கோடு, நுதி, சிதைந்து
கொல்துறைக் குற்றில மாதோ.....'' (புறம்.95)

தன் அரசனின் புகழைக் கூறுவதற்காகவும் போரைத் தடுப்பதற்காகவுதம் எந்த ஒரு எதிர்பார்ப்பும் இல்லாமல் தூது செல்லும் மரபும் இருந்துள்ளதைப் புறநானூற்றுப் பாடல் எடுத்துரைக்கின்றது.

திருக்குறளில் தூது

திருவள்ளுவர் திருக்குறளில் தூது என்ற தலைப்பில் ஓர் அதிகாரத்தை அமைத்துள்ளார். அதில் தூதுவன் எத்தகைய பண்புகளைப் பெற்றிருக்க வேண்டும், தூது செல்பவர்களின் இலக்கணம், தூது செல்லும் முறைகளை எடுத்துரைத்துள்ளார்.

"அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்துஅவாம்
பண்புடைமை தூதுஉரைப்பான் பண்பு.''(குறள்.681)

அன்புடையவனாக இருத்தலும், சிறந்த குடியில் பிறத்தலும் , அரசன் விரும்பும் குணமுடையவனாக இருத்தலும் தூதுவனுக்குரிய பண்பாகும்.

"தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாம் தூது'' (குறள்.685)

வேற்றரசனிடம் தொகுத்துச் சுருக்கமாகச் சொல்லல், கொடுஞ் சொற்களை நீக்கி, கேட்போர் மனம் மகிழும்படிக் கூறுதல், தன்னரசனுக்கு நன்மை உண்டாக்குதல் ஆகியவற்றைச் செய்பவனே தூதுவனாவான்.

இலக்கண, இலக்கிய நூல்கள் உயர்திணை, அஃறிணைப் பொருள்களைத் தூதிற்குரியவர்களாகக் கூற, திருக்குறள் தூது செல்பவன் உயர்திணை என்றும் அவனுக்கு என்று தனித்திறன்கள் இருக்க வேண்டும் என்றும் பட்டியல் இடுகின்றது.

| வ.எண் | தூது செல்வதற்குத் தகுதியுடையவர் பண்புகள் |
|---|---|
| 1. | அன்புடையவன் |
| 2. | சிறந்த குடியில் பிறந்தவன் |
| 3. | அரசன் விரும்பும் குணமுடையவன் |
| 4. | அறிவுடையவன் |
| 5. | ஆராய்ந்து சொல்லும் சொல் வன்மை உடையவன் |

| | |
|---|---|
| 6. | நூல் அறிவில் சிறந்தவர்களில் சிறந்தவன் |
| 7. | அரசிடம் தூது செல்பவன் |
| 8. | நல்ல தோற்றப் பொலிவுடையவன் |
| 9. | வேற்றரசனிடம் தொகுத்துச் சுருக்கமாகச் சொல்லும் ஆற்றல் உடையவன் |
| 10. | கொடுஞ் சொற்களை நீக்கிக் கூறுபவன் |
| 11. | தன்னரசனுக்கு நன்மை உண்டாக்குபவன் |
| 12. | நீதி நூல்களைக் கற்றவன் |
| 13. | பகைவர்க்கு அஞ்சாதவன் |
| 14. | பகைவர் மனம் ஏற்றுக்கொள்ளும்படிக் காலமறிந்து பேசுபவன் |
| 15. | கருதிய செயலை முடிப்பவன் |
| 16. | தன் கடமையை உணர்ந்தவன் |
| 17. | சொல்லுவதற்கேற்ற இடமறிந்தவன் |
| 18. | ஆராய்ந்து பேசுபவன் |
| 19. | தூய்மை உடையவன் |
| 20. | பெரியோர் துணை கொள்பவன் |
| 21. | துணிந்து சொல்பவன் |
| 22. | உண்மை பேசுபவன் |
| 23. | குற்றம் தரும் சொற்களைத் தவறியும் சொல்லாதவன் |
| 24. | தான் கூறும் சொல் தனக்கு அழிவைத் தந்தாலும், தன் அரசனுக்கு நன்மையைத் தரும் சொற்களைக் கூறுபவன் |

என்று 24-க்கும் மேற்பட்டப் பண்புகளை உடையவனாகத் தூது செல்லக்கூடியவன் இருக்க வேண்டும் என்று அக்காலத் தூதுவனுக்குரிய மரபினை எடுத்துரைக்கின்றது.

இதனுடன் கனவு கூட தூதாக வரும் என்ற நிகழ்வினைத் தலைவி கூறுவதாகத் திருக்குறள் ஒன்று அமைந்துள்ளது.

"காதலர் தூதொடு வந்த கனவினுக்கு
யாதுசெய் வேன்கொல் விருந்து"(குறள்.1211)

என் காதலருடைய தூதினைக் கொண்டு வந்த இக்கனவுக்கு, என்ன விருந்து கொடுப்பேன்? என்று தலைவி கூறுகின்றாள்.

காப்பியங்களில் தூது

ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தில் தூது குறித்த செய்திகள் காணப்படுகின்றன.

கானல்வரிக் காதையில், தலைமக்கள் தூதுவிடுக்கும் குறிப்போடு தன்னிடத்து மிகுந்து எழுந்த காதல் உணர்வை வெளிப்படுத்தும் புலம்பல்களாக தூதுப் பாடல்கள் அமைந்துள்ளன.

"நேர்ந்ததன் காதலர் நேவி நெடுந்திண்டேர்
ஊர்ந்த வழிசிதைய ஊர்கின்ற ஓதமே
பூந்தண் பொழிலே புணர்ந்தாடும் அன்னமே
ஈர்ந்தண் துறையே இதுதகா தென்னீரே" (சிலம்பு.கானல்வரி, பா.75)

எனவரும் அடிகளில் தலைவன் தேர்ச்சுவட்டை அழித்த கடல் ஓசையையும், குளிர்ச்சி பொருந்திய பொழிலையும், ஆணும் பெண்ணுமாகப் புணர்ந்தாடும் அன்னங்களையும், ஈரச்செறிவுடன் கூடிய கடற்துறையையும் தலைவி அழைத்து, தலைவன் தன்னை மறந்திருக்கும் செயல் தகாது என்று உரைக்குமாறு வேண்டி நிற்பதனைக் கூறும் பாங்கினைக் காணலாம். அஃறிணைப் பொருள்களை அழைத்துத் தன் துயர்தீர்க்க உதவுமாறு உரைக்கும் தூதுப் பொருண்மை சிலப்பதிகாரத்திலும் வெளிப்படுகின்றது.

*பக்தி இலக்கியங்களில் தூது*

*பக்தி இலக்கியங்களில் அடியார்கள் இறைவனிடம் குயில், தும்பி, பூவை, நெஞ்சு, தென்றல் முதலானவற்றைத் தூதாக அனுப்பும் முறையைக் காண முடிகின்றது. இவ்வகையில் மாணிக்கவாசகர் பாடிய குயிற்பத்து, தூது இலக்கியத்தின் முதல் வித்தாக அமைகின்றது. தன்மகள் கூறிய தகவல்களை எல்லாம் கேட்ட தாய், உன் காதலனை என் முன் அழைத்து வா என்று கூறுகின்றாள். இதனைக் கேட்ட தலைவி குயிலை அழைத்துத் தன் தலைவனை அழைத்துக்கொண்டு வருமாறு தூது அனுப்புகின்றாள்.*

*"கீதமினிய குயிலே கேட்டியேல் எங்கள் பெருமான்*
*பாதம் இரண்டும் வினவில் பாதாளம் ஏழினுக் கப்பால்*
*சோதி மணிமுடி சொல்லிற் சொல்லிறந்து நின்ற தொன்மை*
*ஆதிகுணம் ஒன்று மில்லான் அந்தமிலான் வரக்கூவாய்"(திருவாசகம் குயிற்பத்து.1)*

*இனிமையான குரலுடைய குயிலே! நம்முடைய சிவபெருமானுடைய திருவடிகளிரண்டும் எங்குள்ளன எனக் கேட்டால், கீழுலகம் ஏழுக்கும் அப்பாலாவன. ஒளிபொருந்திய அழகிய திருமுடி எங்கு முடிவதென்று சொல்லப்புகின், அது சொல்லின் அளவைக் கடந்து நின்றது. கேட்பையாயின், பழமை, தோற்றம் என்பனவும், முக்குணம், ஈறில்லாதவனாய் இருக்கும் அவனை இங்கே வரும்படி நீ கூவி அழைப்பாயாக என்கிறாள் தலைவி. இதிலிருந்து மாணிக்க வாசகர் தூது இலக்கியக் கூறுகளைப் பாடியுள்ளார் என்பதை அறிய முடிகின்றது.*

*தூது இலக்கியங்கள்*

*தலைவன் மீது காதல் கொண்டு தலைவி பாடுவதாகவே மிகப் பெரும்பாலான தூதிலக்கியங்கள் அமைந்துள்ளன.*

*தமிழ்விடு தூது நூலில் மதுரை சோமசுந்தரக் கடவுளிடம் காதல் கொண்ட தலைவி காதல் நோயால் துன்புற்றுத் தமிழை அப்பெருமானிடம் தூது விடுவதாக இயற்றப்பட்டுள்ளது.*

*"அரியாசனம் உனக்கே ஆனால் உனக்குச்*
*சரியாரும் உண்டோ தமிழே- விரிஆவுர்"(தமிழ்விடு தூது.62)*

*இவ்வுலகில் உனக்கே அரியாசனம் உண்டு. இங்ஙனம் இருக்க உனக்குச் சமமாக அமரும் தகுதி வாய்ந்தவர் எவரும் உண்டோ, தமிழே! என்று தமிழைத் தூது அனுப்புவதாக அமைந்துள்ளது.*

*அழகர் கிள்ளைவிடு தூது நூலில் அழகர் மலை சிறப்புகள், இறைவன் சிறப்புகள் ஆகியன இடம்பெற்றுள்ளன. அகழர் மலைக் கடவுள் மீது காதல் கொண்ட பெண்ணொருத்தித் தன் காதலை அவரிடம் கூறக் கிளியைத் தூது அனுப்புவதாக அமைகிறது.*

*"…………………… ………………….. நல்வாய்*
*மழலை மொழிதான் மணிவண்ணன் செங்கைக்*
*குழலின் இசைதானோ கூறாய்" (அழகர் கிள்ளைவிடு தூது.59-62)*

*கிளியே! உன்னுடைய வாயில் இருந்து பிறக்கும் மழலைச் சொல்லானது நீல மணி போன்ற வண்ணனாகிய கண்ணன் தன் செம்மை நிறமான கையில் வைத்திருக்கும் புல்லாங்குழலின் இசையோ? நீயே சொல்வாய் என்று தலைவி கிளியிடம் கேட்டு இறைவனின் தன்மையை அறிந்துகொள்ள விளிக்கின்றாள்.*

*இக்காலத்தில் தூது*

*முற்காலத்தில் உயர்திணை முதல் அஃறிணை வரை அனைத்தையும் தூது அனுப்பினர். ஆனால் இக்காலத்தில் கையடக்கத்தில் கைப்பேசி வழியாக அனைத்துச் செய்திகளும் அனைவருக்கும் சென்றடையும் வகையில் வளர்ச்சியடைந்துள்ளது. ஆனால் அக்காலத்தில் தூதினால் எந்தப் பிரச்சனைகளும் தோன்றியதாகத் தெரியவில்லை. ஆனால் இக்காலத்தில் கைப்பேசியை சரியாகப் பயன்படுத்தவில்லை என்றால் பல்வேறு பிரச்சனைகள் உண்டாகின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது.*

*முடிவாக*

*தொல்காப்பியர் காலத்தில் தானே தூதுவராகப் பிரிந்தும் சென்றுள்ளனர். அதே சமயத்தில் தூதும் அனுப்பியுள்ளனர். அஃறிணைப் பொருள்கள் இவை என்று தொல்காப்பியர் குறிப்பிடவில்லை. ஆனால் உயர்திணையில் யார் தூது செல்வோர் என்பதைக் குறிப்பிட்டுள்ளார்.*

அகத்தூது, புறத்தூது என்றநிலை இருந்துள்ளது. திருக்குறள் உயர்திணையில் தூது செல்வோரின் பண்புகளையும் முறைகளையும் மிகத் தெளிவாக எடுத்துரைத்துள்ளது. தூது செல்வோர் பயன் கருதியும் செல்வதுண்டு, கடமை நிலையிலும் செல்வதுண்டு என்ற நிலை இருந்துள்ளது. இக்காலத்தில் பெரும்பான்மை மின் சாதனங்களே தூதாகப் பயன்படுகின்றன. அக்காலத்தில் தூது நிலையில் பண்பாட்டு மரபுமுறை இருந்துள்ளதை மறுக்க முடியாது.

துணை நின்ற நூல்கள்


1. ச.வே.சுப்பிரமணியன், தொல்காப்பியம் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2019.
2. ச.திருஞானசம்பந்தம், நன்னூல் – சொல்லதிகாரம், கதிர் பதிப்பகம், திருவையாறு, 2009.
3. உ.வே.சா. அவர்கள் பதிப்பித்த தூது நூல்கள்-7, உ..வே.சா. நூல்நிலையம், சென்னை,2009.
4. ச.வே.சுப்பிரமணியன், சங்க இலக்கியம் எட்டுத்தொகை மூலமும் தெளிவுரையும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2010.
5. கோ.பெரியண்ணன், திருக்குறள், வனிதா பதிப்பகம், சென்னை, 2019.
6. அடியார்க்கு நல்லார் (உ.ஆ), சிலப்பதிகாரம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1990.
7. கா.சுப்பிரமணியப் பிள்ளை, திருவாசகம், பாரி நிலையம், சென்னை, 2007.
8. கதிர் முருகு, அழகர் கிள்ளைவிடு தூது, சாரதா பதிப்பகம், சென்னை, 2011.
9. செ.இராதாகிருஷ்ணன், தமிழ்விடு தூது, முல்லை நிலையம், சென்னை, 2016.


********* ********* ********** ********* ********* ********** ********** **********